# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 90/மா/2019**
**ஆணை நாள்: 19–02–2020**

திரு. R.R. ராமகோடி,
மதுரை – 625 009. **– முறையீட்டு மனுதாரர்**

1. திரு. வெங்கடேசன், சுகாதார ஆய்வாளர்,
2. திரு. முருகேசன், துப்புரவு மேற்பார்வையாளர்.
   மண்டலம் - 03, மதுரை மாநகராட்சி. **– எதிர் மனுதாரர்கள்**

மதுரை மாநகராட்சி, குருவிக்காரன் சாலை எண்.36B என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஆர். ஆர். ராமகோடி என்பவரது 24.5.2019 நாளிட்ட முறையீட்டு மனு 27.5.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண்.90/2019 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு குறித்து அறிக்கை பெறப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் திரு. ஆர். ஆர். ராமகோடி, தனது 24.5.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில், மதுரை மாநகராட்சி, மண்டலம் -03, வார்டு எண்.54, அனுப்பானடி ரோடு, எண்.18 என்ற முகவரியில் தனது மனைவி திருமதி R.R. கீதா பெயரில் உள்ள முத்துலட்சுமி இல்லம் என்ற கட்டிடத்தில் காதுகுத்து, சீமந்தம், நிச்சயதார்த்தம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வாடகைக்கு

விடுவதாகவும், நிகழ்ச்சிகள் நடைபெறும்போது சேரும் குப்பைகளை குப்பைத் தொட்டிகளில் சேர்த்துவிடுவதாகவும், ஆனால் துப்புரவு பணியாளர்கள் தன்னிடம் தகராறு செய்து அபராதம் விதிப்பதாக ரூ.1000/- பெற்றுகொண்டதாகவும், ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும், இலைகளை அகற்றுவதற்கு ரூ.500/- வழங்கவேண்டுமென்று வலியுறுத்துவதாகவும் இது சம்மந்தமாக மதுரை மாநகராட்சி ஆணையருக்கு மனு அனுப்பியுள்ளதாகவும், மனுவை எந்த பிரச்சனையும் இல்லாமல் முடிப்பதற்கு ஆபீஸ் செலவிற்கு ரூ.10,000/- தர வேண்டுமென்றும் தெரிவித்தனர் என்றும், லஞ்சம் கோரும் அலுவலர்கள் மீது விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்க முறையீட்டுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க மதுரை மாநகராட்சி, 3-வது மண்டல அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 31.5.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

மதுரை மாநகராட்சி, 3-வது மண்டல அலுவலர் 15.7.2019 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் எதிர்மனுதாரராக திரு. வெங்கடேசன், சானட்டரி இன்ஸ்பெக்டர், மண்டலம்-03, மதுரை மாநகராட்சி என குறிப்பிட்டுள்ளார் என்றும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள இம்மண்டலத்தின் 54-வது வார்டில், திரு. A. நல்லுசாமி என்பவர் சானிட்டரி இன்ஸ்பெட்டராக பணிபுரிந்து வருகிறார் என்றும், வாதி தவறான தகவல் தந்துள்ளார் என்றும், மதுரை மாநகராட்சியின் 3-வது மண்டலம், வார்டு 54, அனுப்பானடி ரோடு, எண்.18-ல் முத்துலட்சமி இல்லம் என்ற பெயரில் திருமதி. R.R. கீதா பெயரில் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது என்றும், அம்மண்டபத்தில் திருமணம், நிச்சயதார்த்தம், சீமந்தம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறதென்றும், மேற்படி திருமண மண்டபத்தின் உரிமையாளர் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பை என தரம் பிரித்து போடுவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், திருமண மண்டப உரிமையாளர் 11.6.2018 அன்று குப்பைகளை தரம் பிரிக்காமல் மாநகராட்சி தொட்டிக்கு கீழே கொட்டிவிட்டு சென்றதால் ரூ.1000/- அட்டவணை IV-ன்படி ஸ்தல அபராதம் விதிக்கப்பட்டு உரிய ரசீது வழங்கப்பட்டு வசூல் செய்து மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்றும், முறையீட்டு மனுதாரர் குப்பைக்காக மாநகராட்சியில் காலமுறை கட்டணமோ (Periodical fee) மற்றும், பயனாளர் கட்டணமோ (User fees) எதுவும் இது நாள் வரையில் செலுத்தவில்லை என்றும், ஆனால் நிகழ்ச்சி நடத்துபவர்களிடம் இதற்குரிய தொகை

ரூ.1000/-ஐ தொடர்ந்து பெற்று வருகிறார் என்றும், மனுதாரர் அம்மகாலில் இருந்து 18.05.2019 அன்று குப்பைகளை தரம் பிரிக்காமல் மாநகராட்சி குப்பைத் தொட்டியில் சேர்த்து உரிய விதிமுறைகளை மீறியதால் மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள், 2017, அட்டவணை IV வரிசை எண்.2 (3)-ன் கீழ் ரூ.5000/- அபராதமாக விதிக்கப்பட்டது என்றும், ஆனால் மேற்படி அபராதத் தொகையை இன்னும் செலுத்தப்படவில்லை என்றும், அம்மகாலுக்கு அருகில் உள்ள சுந்தரம் தங்கம் மகாலுக்கும் ரசீது எண்.010663/18/05/2019ன்படி ரூ.5000/- அபராதம் விதிக்கப்பட்டது என்றும், மாநகராட்சி அலுவலர்கள் மனுதாரரிடம் ரூ.500/- மற்றும் ரூ.10,000/- கேட்டதாக கூறுவது முற்றிலும் பொய்யானது என்றும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 19.9.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் மதுரை மாநகராட்சி, மண்டலம்-03, வார்டு எண்.54, எண்.18 என்ற முகவரியில் முத்துலட்சுமி இல்லம் என்ற 2500 சதுர அடி கட்டிடம் தனது மனைவி கீதா பெயரில் உள்ளது என்றும், அதில் காது குத்து, சீமந்தம், வளைகாப்பு போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது என்றும், இந்நிகழ்ச்சிகளில் ஏற்படும் கழிவுகளை தாங்களே பிரித்து மாநகராட்சி குப்பைத் தொட்டியில் சேர்த்து விடுகிறோம் என்றும், மாநகராட்சி சுகாதார பணியாளர்கள் குப்பைத் தொட்டியில் குப்பைகளை கொட்டக் கூடாது என்று தங்களது கட்டிடத்தின் முன் தகராறு செய்து ரூ.1000/- அபராதம் விதித்துள்ளார்கள் என்றும் 19.6.2019-ல் மாநகராட்சி ஆணையர் மற்றும் 3-வது மண்டல அலுவலருக்கும் மனு அனுப்பிவைத்துள்ளதாகவும், எதிர் மனுதாரர்கள் தனது மனுவினை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இலைகளை அகற்ற ரூ.500/- கொடுக்க வேண்டும் என்றும், எந்த பிரச்சனையும் இல்லாமல் இருப்பதற்கு ஆபீஸ் செலவிற்கு ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என்றும் மண்டல அலுவலகத்தில் இருந்து வந்தவர்கள் கேட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

மேலும், முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் மேற்படி கட்டிடத்திற்கு கட்டிட அனுமதியோ, சீமந்தம், வளைகாப்பு போன்ற நிகழ்ச்சிகளுக்கு வாடகை விடுவதற்கு எந்தவித உரிமையோ, அனுமதியோ, மாநகராட்சியிடமோ, வேறு யாரிடமோ பெறப்படவில்லை என்றும், தற்பொழுது திருத்திய சொத்து வரியாக ரூ.14,300/- கட்டி வருவதாகவும், நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வாடகையாக ரூ.6000/- வசூலிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம், மதுரை மாநகராட்சி 3வது மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தனது

வாக்குமூலத்தில் யார் கையூட்டு கேட்டார்கள் என்ற விவரத்தையோ அல்லது வேறு ஆதாரங்களோ தாக்கல் செய்யவில்லை. ஆனால் மண்டல அலுவலர் அறிக்கையின்படி அபராதம் விதிக்கப்பட்ட விவரம் அறியமுடிகிறது. எனவே, கையூட்டினை கோரினார்கள் என்ற ஆதாரமற்ற பெயர் கூட குறிப்பிடமுடியாத மனுதாரரின் கூற்று ஏற்புடையதாய் இல்லை. மனுதாரர் குடியிருப்பு என்ற வகைப்பாட்டில் கட்டிட அனுமதி பெற்று வணிக நோக்கில் பயன்படுத்தப்படுவதாக அவரது வாக்குமூலம் மூலம் அறிய முடிகின்றது. எனவே, மதுரை மாநகராட்சி உரிய வரி மதிப்பீடு செய்யுமாறும், மனுதாரருக்கு திடக் கழிவு மேலாண்மைக் குறித்து உரிய அறிவுரைகள் வழங்கவும், அதன்படி செயல்படாவிட்டால் உரிய விதிகளின்படி நடவடிக்கை எடுத்திடவும் ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 19-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலர்.

பெறுநர்

1. திரு. R.R. ராமகோடி,
   36B, குருவிக்காரன் சாலை,
   காமராஜர் சாலை,
   மதுரை – 625 009.

2. மண்டல அலுவலர்,
   மண்டலம் -03,
   மதுரை மாநகராட்சி.

3. மாநகராட்சி ஆணையர்
   மதுரை மாநகராட்சி, மதுரை.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3 / இ. கோ. / உதரி